சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.
வழக்கு எண் : MCOP: 30/2021

2024ம் ஆண்டு ஜுலை திங்கள் 19ம் நாள் மனுதாரர் சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. T.சண்முகபிரியா கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் அரங்கநாதன் (PW2) | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**<u>முதல் விசாரணை</u>**

19.07.2024

நான் தற்போது அருப்புக்கோட்டை காவல்நிலையத்தில் சார்பாய்வாளராக பணிசெய்கிறேன். நீதிமன்றத்திலிருந்து வரப்பெற்ற அழைப்பாணையின்பேரில் சாட்சியம் அளிக்கிறேன். அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை நான் கொண்டு வந்துள்ளேன். குற்ற எண்.56/2018 சம்மந்தப்பட்ட ஆவணம் கொண்டு வந்துள்ளேன். குற்றஇறுதிஅறிக்கை சா.சா.ஆ.1, பிரேத பரிசோதனை அறிக்கை சா.சா.ஆ 2, மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை சா.சா.ஆ 3 ஆகிய ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

**<u>குறுக்கு விசாரணை :</u>** ( 2வது எதிர்மனுதாரர் தரப்பில்)

விபத்திற்கு யாருடைய கவனகுறைவு காரணம் என்று குற்றஇறுதிஅறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இறந்தவர் ஈஸ்வரன் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. விபத்தில் இறந்த ஈஸ்வரன் மீது எந்த தவறும் இல்லை என்று எதாவது மனு எதுவும் தாக்கல் செய்துள்ளரா என்றால் இல்லை.

**மறுவிசாரணை இல்லை.**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.